செ. கு. எண்:021 நாள் :16.05.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. ஓ. பன்னீர்செல்வம்** அவர்களின்

அறிக்கை – 16.5.2015

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டத்திலுள்ள ஆழியாறு அணையின் பழைய வாய்க்கால்களின் பாசனப் பகுதிகளுக்கு முதல் மற்றும் இரண்டாம் போக பாசனத்திற்காகவும், பொள்ளாச்சி நகர குடிநீர் தேவைக்காகவும் **ஆழியாறு அணையிலிருந்து** தண்ணீர் திறந்து விடுமாறு விவசாய பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள, ஆழியாறு அணையிலிருந்து பழைய வாய்க்கால்களின் மூலம் பாசனம் பெறும் நிலங்களின் முதல் மற்றும் இரண்டாம் போக பாசனத்திற்கு **17.5.2015 முதல்** தண்ணீர் திறந்துவிட ஆணையிடப்படுகிறது.

இதனால், கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டத்தில் உள்ள **6,400 ஏக்கர்** நிலங்கள் பயன்பெறும்.

**ஓ. பன்னீர்செல்வம்**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9